1971 ஜூலை 8]

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இந்த மருத்துவமனை ஓரளவுக்கு அரசாங்கத்தின் மானியத்தைப் பெறுகிறது என்பது உண்மையானாலும், பெரும் செலவு செய்து கோயம்புத்தூர் மாவட்டத்தில் அமைக்கப்பட்டிருக்கிறது. இது தானாக இயங்குகின்ற ஒரு குழுவினரால் நடத்தப்படுகிறது. மாவட்ட சுகாதார அதிகாரி அவர்களும், மாவட்ட மருத்துவ அதிகாரி அவர்களும், மாவட்ட ஆட்சியாளரும் ஏற்கெனவே இந்தக் குழுவில் இடம் பெற்றிருக்கிறார்கள். ஐந்தாயிரம் ரூபாய் நன்கொடை அளித்தவர்களும் இக்குழுவில் இடம் பெற்றிருக்கிறார்கள். எம்.எல்.ஏ-க்களும், எம்.பி-க்களும் "எக்ஸ்-அபிஷியோ" என்ற முறையில் நிர்வாகக் குழுவிலே இடம் பெறவேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம் நேரிடையாக ஆலோசனைக் குழுவை நியமிக்கவில்லை.

திரு. தொ. ப. சீனிவாசன்: பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டத்திலே பெண்ணாத்தூரிலே ஒரு காச நோய் மருத்துவ மனை..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தக் கேள்வி பெருந்துறையைப் பற்றியது. நீங்கள் பெண்ணாத்தூரைப்பற்றிக் கேட்கிறீர்கள். இந்த துணைக் கேள்வி அனுமதிக்கப்படவில்லை.

திரு. எ. சுப்பிரமணியம்: தலைவர் அவர்களே, பெருந்துறை காச நோய் மருத்துவ மனையிலிருந்து சிங்காநல்லூர் மருத்துவ மனைக்கு......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தத் துணைக் கேள்வி கூட அனுமதிக்கப்படவில்லை. இது ஆலோசனைக் குழு அமைக்கப்படுவதைப்பற்றிய கேள்வி.

திரு. கே. டி. கே. தங்கமணி: அரசாங்கம் இதற்கு மானியம் கொடுக்கக்கூடிய காரணத்தினாலே குறைந்த பட்சம் அந்தப் பகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற சட்டமன்ற உறுப்பினராவது அந்தக் குழுவிலே இடம் பெற ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இங்கே உள்ள குறிப்பிலே
"Provision was made to include a local M.L.A. as an ex-officio Member of the Governing Body".
என்றுதான் இருக்கிறது. இடம் பெற்று விட்டார்களா என்பதை இப்பொழுது நான் கூறுவதற்கு இல்லை.

Supply of rice to Sri Guruvayoorappan Temple

*160 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR: Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(a) whether rice is being supplied by this Government to Guruvayoorappan Temple in Kerala State; and

(b) if so, the details thereof?

[1971 ஜூலை 8

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) கோயில் அதிகாரிகள் தாம் வெளிச்சந்தையில் இருந்து வாங்கிய நெல்லிலிருந்து 200 டன் நெல்லை தமிழ் நாட்டிலிருந்து கேரள மாநிலத்திற்கு ஏற்றி அனுப்ப 1970-ஆம் ஆண்டு அக்டோபர்-நவம்பர் திங்களில் அரசு அனுமதித்துள்ளது.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, அந்த குருவாயூரப்பன் கோவிலுக்கு விசேஷமாக அரிசி எடுத்துச் செல்வதில் என்ன பொருள் இருக்கிறது என்று தெரியவில்லை. எதற்காக குருவாயூரப்பன் கோயிலுக்கு மாத்திரம்? கேரளாவிலே பத்மநாபசாமி கோவில் இருக்கிறது, புகழ்பெற்றதுதான் அதுவும். பல கோயில்கள் அப்படி இருக்கும்பொழுது அந்த குருவாயூரப்பன் கோயிலுக்கு மட்டும் அரிசி எடுத்துச் செல்லப்படுவது ஏன் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : திருவனந்தபுரத்திலுள்ள பத்மநாபசாமி கோயிலுக்கும் அரிசி கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. எஸ். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தமிழகத்திலிருந்து நல்ல அரிசி வேண்டுமென்று கேரளத்திலிருக்கின்ற குருவாயூரப்பனே மனுச் செய்து கொண்டாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அங்கிருந்த தர்மகர்த்தாக்கள் மனுச் செய்துகொண்டார்கள். பேரறிஞர் அண்ணா இருந்தபொழுது இது அனுமதிக்கப்பட்டது. இப்பொழுது தொடர்ந்து கொடுத்துக் கொண்டு வருகிறோம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, இதுபற்றி கேரள அரசாங்கத்திடமிருந்து ஏதாவது விண்ணப்பம் வந்திருக்கிறதா? அல்லது அங்கேயிருக்கின்ற நிர்வாக போர்டு விண்ணப்பம் செய்ததா? எந்த அடிப்படையிலே கொடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அங்கே இருக்கின்ற கோழிக்கோடு ஸாமூரின் ராஜா அவர்களிடமிருந்து வந்தது.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, ஆண்டவன் மக்களுக்கு படைப்பதாகத்தான் கேள்விப்பட்டிருக்கிறோம். இப்பொழுது நம்முடைய அரசாங்கம் ஆண்டவனுக்கு அளித்துக்கொண்டிருக்கிறது. அப்படிக் கொடுக்கப்படுகின்ற அரிசியும் இடையிலே போய் விடுகின்றது என்ற தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் ; அரசாங்கம் மக்களுக்குப் படைக்கிறது, ஆண்டவனுக்குப் படைக்கவில்லை, மக்கள்தான் ஆண்டவனுக்குப் படைக்கிறார்கள். இடையிலே எதுவும் போவதாக தகவல் இல்லை.

திரு. எம். சுரேந்திரன் : கேரளத்திலிருக்கின்ற பத்மநாபசாமிக்கு அரிசி அனுப்பப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். கடவுள்களை நிலையாக வைத்தவர்கள் மனிதர்கள்தான். ஆனால் அப்படிப்பட்ட மனிதர்கள் அங்கே பட்டினி கிடக்கிறார்கள் என்ற தகவல் வருகிறது. எனவே அவர்களுக்கும் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இரண்டு அரசாங்கத்திற்கும் உள்ள பிரச்னை இது. தனி உணவு மண்டலம் என்று மத்திய அரசு வைத்திருக்கிறது. அங்கிருக்கின்ற மக்களுக்கு அரிசி தேவைப்படு கிறது என்று சொன்னால் மத்திய அரசு சென்ட்ரல் பூலிலிருந்து கொடுக்கவேண்டும். இடையிலே கள்ள வியாபாரிகள் கொடுத்துக் கொண்டு வந்தார்கள். இதைப்பற்றி நேற்றைய தினமே நான் விளக்கிக் கூறியிருக்கிறேன்.

திரு. ஏ. சி. நரசிம்மன் : தலைவர் அவர்களே, கேரளத்திலிருக்கின்ற கோயிலுக்கு அனுமதிக்கப்படுகின்றது. வங்காள தேசத்தின் அகதி களுக்கும் அரிசி அனுப்பப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வி அனுமதிக்கப் படவில்லை.

திரு. எம். தேவராசன் : காவிரி நீர் நமக்குக் கிடைக்க குருவாயூரப்பன் அருள் கிடைக்குமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இது பக்தர்கள் வேண்டிக் கொள்ள வேண்டியது.

Sugar stocks

• 161 *Q.*—Thiru N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Industries be pleased to state whether this Government has requested the Centre during 1971 to lift the sugar stock in the Sugar Factories in the State ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தற்போதுள்ள லெவி கோட்டா (Levy Quota) சர்க்கரை 12,000 டன்னுக்குக் குறைவாயிருப்பதை 15,000 டன்னுக உயர்த்தும்படியும் எடுத்துச் செல்லப்படாமலிருக்கும் லெவி கோட்டாவை விசேட லெவி கோட்டாவாக ஒதுக்கும்படியும் இந்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது. மற்ற மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்ட சர்க்கரையை அவைகள் எடுக்காததினால்தான் இவ்விதச் சர்க்கரைத் தேக்கமேற்பட்டது. சில தனியார் சர்க்கரை ஆலைகள் உயர் நீதிமன்றத்தில் ரிட் மனுக்கள் (Writ petitions) தாக்கல் செய்தன. உயர்நீதிமன்றம் சட்டப்படியுள்ள காலவரைக்குப்பின் எடுத்துச் செல்லப்படாத சர்க்கரையை விற்க அனுமதித்துள்ளது. இந்த மாநிலத்தில் இவ்விதம் 70,000 மூட்டை சர்க்கரை வைத்திருக்கும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கும் இந்திய அரசு இம்மாதிரி பரிகாரம் கொடுத்தாலன்றி அவைகளும் சட்டபூர்வமான பரிகாரம் காணக்கூடுமென்று இந்திய அரசுக்குத் தெரியப்படுத்தப் பட்டுள்ளது. 1971-ம் ஆண்டு மே திங்களில் இந்திய அரசு தமிழ் நாட்டின் லெவி கோட்டாவை மேற்கொண்டு 1,650 டன் அதிகப் படியாக உயர்த்தியுள்ளது. மத்திய சர்க்கரை கையிருப்பு (Buffer stock of sugar) ஒன்றை நிறுவும்படி இந்த அரசாங்கம் இந்திய அரசை வற்புறுத்தியுள்ளது. சர்க்கரைக் கட்டுப்பாடு இப்பொழுது ரத்து செய்யப்பட்டுள்ளது. சர்க்கரை ஒதுக்கப்பட்ட மாநிலங்கள் அவை எடுத்துச்செல்லவில்லை என்ற சிக்கல் தற்போது எழாது.